# தமிழ்நாடு ஒன்றுபட்டு நிற்கும்போது எந்த சக்தியாலும் நம்மை வீழ்த்த முடியாது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி... முதல் பக்கத் தொடர்ச்சி

**எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு உரிய நிதி கொடுப்பதில்லை.**

**தமிழ்நாட்டுக்கான சிறப்புத் திட்டங்கள் இல்லை.**

**பள்ளிக் கல்விக்கான நிதி மறுக்கப்படுகிறது. ஒன்றிய அரசின் திட்டங்களுக்கும் தமிழ்நாடு அரசுதான் நிதி ஒதுக்கி நிறைவேற்றி வருகிறது.**

**நீட் தேர்வு மூலமாக அடித்தட்டு மாணவர்களின் மருத்துவக் கல்விக் கனவு சிதைக்கப்படுகிறது.**

**தேசியக் கல்விக் கொள்கை, இந்தித் திணிப்புக் கொள்கையாக மட்டுமே இருக்கிறது.**

**தமிழுக்கு வெறும் ரூ.113 கோடியும், சமஸ்கிருதத்திற்கு ரூ.2,532 கோடியும் ஒதுக்கி இருக்கிறார்கள்.**

**தமிழர்களின் வரலாற்றுப் பெருமையைச் சொல்லும் கீழடி அறிக்கையைத் திட்டமிட்டு மறைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.**

**இவற்றை எல்லாம் நாம் தொடர்ந்து பேசுவதால், தொகுதி மறுவரையறை என்ற பெயரில், தமிழ்நாட்டின் நாடாளுமன்றத் தொகுதிகள் எண்ணிக்கையைக் குறைக்கத் திட்டம் தீட்டுகிறார்கள். இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.**

### அனைத்து வீடுகளுக்கும் சென்று, மக்களுடன் சந்திப்பு!

ஒரு சிலவற்றை மட்டும்தான் சொல்லியிருக்கிறேன். இவை எல்லாம் வெறும் அரசியல் விமர்சனங்கள் மட்டுமில்லை; தமிழ்நாட்டின் உரிமை சார்ந்தவை! இவை எல்லாம் அரசியல் கட்சிகளால் மட்டுமில்லை, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களாலும் எதிர்க்கப்பட வேண்டும். அதற்காகத்தான், தமிழ்நாட்டில் இருக்கும் ஆளுங்கட்சி – எதிர்க்கட்சி என்று பாராமல் அனைத்து வீடுகளுக்கும் சென்று, மக்கள் அனைவரையும் சந்திக்கப் போகிறோம்.

அப்போது, திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைய விரும்புவோர் தங்களை இணைத்துக் கொள்ளலாம். தி.மு.க.வில் சேர ஆர்வம் உள்ளோர் செயலி மற்றும் நேரடிப் படிவம் மூலம் பதிவு செய்யப்படுவார்கள்.

மேலோட்டமாகப் பார்த்தால், தி.மு.க. தனக்கான உறுப்பினர்களைச் சேர்ப்பதாக உங்களில் சிலர் நினைக்கலாம். ஆனால், உண்மையான நோக்கம் என்பது கட்சி எல்லைகளைத் தாண்டி, தமிழ்நாட்டின் நலனுக்கானது. தமிழ்நாடு ஒன்றுபட்டு நிற்கும்போது, எந்த சக்தியாலும் நம்மை வீழ்த்த முடியாது என்று காட்டியாக வேண்டும்.

பா.ஜ.க.வின் அரசியல் படையெடுப்பை பண்பாட்டு படையெடுப்பை தமிழ்நாடு மீது தொடுக்கப்பட்டிருக்கும் பொருளாதாரப் போரை எதிர்கொள்ள, நெஞ்சுரம் உள்ள அரசியல் சக்தி தேவை. அதை உருவாக்கத்தான் ‘ஓரணியில் தமிழ்நாடு’ பரப்புரையை இயக்கமாகத் தொடங்கி இருக்கிறோம் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**செய்தியாளர்:** *மக்களை சந்திக்கும்போது எவைகளெல்லாம் முன்னெடுத்துச் செல்லப்படும்?*

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின்:** ஒன்றிய அரசால் தமிழ்நாடு எப்படியெல்லாம் வஞ்சிக்கப்படுகிறது – எப்படியெல்லாம் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் சொல்ல இருக் கிறோம்.

### கழக அரசின் சாதனைகளை துண்டுப் பிரசுரமாக விநியோகம்!

அதேநேரத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்ததற்குப் பிறகு செய்திருக்கும் சாதனைகள், திட்டங்கள் – ஏற்கனவே, மக்களுக்கு தெரிந்திருக்கிறது – இருந்தாலும், நினைவுப்படுத்தி, துண்டு பிரசுரமாக வழங்கி, அந்தப் பிரசாரமும் நடைபெற இருக்கிறது. அதேபோல, உறுப்பினர் சேர்க்கைப் பணியும் நடைபெற இருக்கிறது.

**செய்தியாளர்:** *இதன் மூலமாக தி.மு.க. தேர்தலுக்குத் தயாராகி விட்டது என்று சொல்லலாமா?*

**மு.க.ஸ்டாலின்:** நிச்சயமாக... இப்போது இல்லை, தயாராகி வெகு நாட்களாகிவிட்டது.

**செய்தியாளர்:** *நீங்கள் நல்ல நல்ல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஆனால், ஒரு சில அதிகாரிகள் செய்யக்கூடிய தவறுகளால் சரியான முறையில் உங்களுக்குத் தகவல் தெரிய வருவதில்லை - ஒவ்வொரு விஷயங்களும் மக்களுக்காக நலத் திட்டங்களை கொண்டு வரும்போது அதிகாரிகள் தவறு செய்யும்போது நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை - இரண்டு நாட்கள் கழித்துதான் நடவடிக்கை எடுக்கிறார்கள். FIR போட்டிருந்தால் பிரச்சனை யில்லாமல் இருந்திருக்கும்... அது பற்றி?*

**மு.க.ஸ்டாலின்:** என்ன தவறு செய்தார்கள்? தகவல் தெரிந்தவுடன் நடவடிக்கை எடுத்துவிட்டோம். கைது செய்துவிட்டோம். இன்றைக்குக்கூட மேலதிகாரியின் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

**செய்தியாளர்:** *எதிர்க்கட்சியில் உள்ள குடும்பங்களைச் சந்திக்கப் போகிறீர்களா? அவர்களிடமும் இதை வலியுறுத்தப் போகிறீர்களா?*

**மு.க.ஸ்டாலின்:** நிச்சயமாக சொல்லப் போகிறோம்... விருப்பம் உள்ளவர்களைச் சேர்க்கப் போகிறோம். கட்டாயப்படுத்திச் சேர்க்கப் போவதில்லை. சேர்ந்தே தீருங்கள் என்று சொல்ல மாட்டோம். அவ்வாறு சொன்னாலும் சேர மாட்டார்கள். அதனால் அவர்கள் விருப்பம் இருந்தால் சேர்ப்போம்.

**செய்தியாளர்:** *எதிர்க்கட்சித் தலைவர் மக்களைச் சந்திக்கும் பயணத்தை 7ஆம் தேதியிலிருந்து தொடங்கப்போகிறார். இந்தப் பயணத்தை எப்படி பார்க்கிறீர்கள்?*

**மு.க.ஸ்டாலின்:** அவர் இப்போதுதான் மக்களை சந்திக்கப் போகிறார். இப்போது தான்... நாங்கள் எப்போதிலிருந்தோ சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

**செய்தியாளர்:** *கடந்த வாரமே ஒன்றிய அரசின் மீது தொடர்ச்சியாக பல்வேறு ... இப்போது மீண்டும் ஓரணியில் தமிழ்நாடு என்ற பரப்புரையின் மூலம் பொது மக்களை சந்தித்துச் சொல்வதால் இது பலனளிக்கக்கூடிய திட்டமாக அமையுமா?*

**மு.க.ஸ்டாலின்:** மக்களுக்குத் தெளிவாக தெரியும், இருந்தாலும் அதை நினைவூட்டுகிறோம் - வலியுறுத்துகிறோம் வற்புறுத்துகிறோம் – அவ்வளவுதான்.

**செய்தியாளர்:** *ஓரணியில் தமிழ்நாடு - புதிய திட்டம் மட்டுமா? அல்லது தேர்தல் பரப்புரையும் இருக்குமா?*

**மு.க.ஸ்டாலின்:** தேர்தல் பரப்புரையும் உண்டு - உறுப்பினர் சேர்க்கையும் உண்டு - ஒன்றிய அரசு வஞ்சித்துக் கொண்டிருக்கும் அந்தக் கொடுமைகளும் உண்டு – இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் செய்து கொண்டிருக்கும் சாதனைகளையும் சொல்ல இருக்கிறோம்.

**செய்தியாளர்:** *எடப்பாடி பழனிசாமி அவர்களின் வீட்டிற்குச் செல்வீர்களா ?*

**மு.க.ஸ்டாலின்:** அது அங்கிருக்கக்கூடிய சூழ்நிலையைப் பொறுத்திருக்கிறது. பொறுப்பு ஒவ்வொருவரிடமும் ஒப்படைத்திருக்கிறோம். அவர்கள் சூழ்நிலைக்கேற்றவாறு செல்வார்கள். நான் அந்தப் பகுதியில் இருந்தால் நிச்சயம் செல்வேன்.

**செய்தியாளர்:** *தேர்தலுக்கு இன்னும் 10 மாதங்கள்தான் இருக்கிறது. ஆனால் கூட்டணிக் கட்சிகள் கூடுதல் இடங்கள் கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள். இதை தி.மு.க. எப்படி சமாளிக்கப் போகிறது?*

**மு.க.ஸ்டாலின்:** தேர்தல் தேதி அறிவித்த பிறகு நாங்கள் உட்கார்ந்து பேசுவோம். அதைச் சமாளித்து விடுவோம்.

**செய்தியாளர்:** இந்தக் கூட்டணியில் இன்னும் கூடுதல் கட்சிகள் சேர வாய்ப்பிருக்கிறதா?

**மு.க.ஸ்டாலின்:** இப்போது இருக்கும் சூழ்நிலையைப் பொறுத்தவரைக்கும் வருவதற்கான வாய்ப்பிருக்கிறது. ஆனால், வாய்ப்பு வருகின்ற நேரத்தில் அதை எப்படி சேர்ப்போம் என்று கலந்துபேசிச் செய்வோம்.

**செய்தியாளர்:** நான்கு ஆண்டுகள் ஆட்சி நிறைவடைந்துவிட்டது. தி.மு.க.வின் முத்தாய்ப்பான மூன்று திட்டங்கள் என்றால், எதை வரிசைப்படுத்துவீர்கள்?

**மு.க.ஸ்டாலின்:** எல்லாவற்றையும் வரிசைப்படுத்தலாம். நீங்கள் கேட்டீர்கள் என்பதால் மூன்று சொல்கிறேன்.

காலை உணவுத் திட்டம் – அது தேர்தல் வாக்குறுதியில் கிடையாது. இல்லையா? அதை நிறைவேற்றியிருக்கிறோம்.

மகளிர் உரிமைத் திட்டம் – அது தேர்தல் வாக்குறுதியில் இருக்கிறது. அது கிட்டத்தட்ட 60 சதவிகிதத்திற்கும் மேல் நிறைவேற்றப்பட்டுவிட்டது. இன்னும் 20 சதவிகிதம் 30 சதவிகிதம் மீதம் இருக்கிறது. விண்ணப் பத்தை அவர்கள் பூர்த்தி செய்யாமல் தவறவிட்டுவிட்டார்கள். சிலர் தவறுதலாகப் பதிவு செய்திருக்கிறார்கள். அதையெல்லாம் திருத்தி, அதற்கு ஒரு முகாம் போட்டு, அதையும் செப்டம்பர் மாதத்திலிருந்து வழங்க இருக்கிறோம். அது, ஒரு பெரிய திட்டம்.

பேருந்தில் கட்டணமில்லா விடியல் பயணம் – அது ஒரு பெரிய திட்டம்.

மாணவ – மாணவியர்கள் பள்ளிப் படிப்பு முடித்துவிட்டு கல்லூரிகளுக்குச் செல்லும்போது 1000 ரூபாய் வழங்கும் புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் எனும் அற்புதமான திட்டம். இப்படி பல திட்டங்கள் இருக்கின்றன. எதை சொல்வது? – எதை விடுவது? என்று தெரியவில்லை.

**செய்தியாளர்:** *‘உடன்பிறப்பே வா’ என்றீர்கள்? உற்சாகமாக இருக்கிறதா?*

**மு.க.ஸ்டாலின்:** அதைத்தான் தொடர்ந்து பார்த்து கொண்டிருக்கிறேனே... ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஒன்றரை நாள் ஒதுக்குகிறேன். நீங்களே பார்த்திருப்பீர்கள். நான் ஒரு நாளைக்கு மூன்று தொகுதிகளை எடுத்துக் கொள்கிறேன். காலை, மாலை. ஏனென்றால், கோட்டைக்குச் சென்று வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அரசு வேலையும் பார்க்க வேண்டியிருக்கிறது.

### தி.மு.க. ஆட்சியின் முத்தாய்ப்பான மூன்று திட்டங்கள்!

**செய்தியாளர்:** *நான்கு ஆண்டுகள் ஆட்சி நிறைவடைந்துவிட்டது. தி.மு.க.வின் முத்தாய்ப்பான மூன்று திட்டங்கள் என்றால், எதை வரிசைப்படுத்துவீர்கள்?*

**மு.க.ஸ்டாலின்:** *எல்லாவற்றையும் வரிசைப்படுத்தலாம். நீங்கள் கேட்டீர்கள் என்பதால் மூன்று சொல்கிறேன். காலை உணவுத் திட்டம் - அது தேர்தல் வாக்குறுதியில் கிடையாது. இல்லையா? அதை நிறைவேற்றியிருக்கிறோம். மகளிர் உரிமைத் திட்டம் - அது தேர்தல் வாக்குறுதியில் இருக்கிறது. அது கிட்டத்தட்ட 60 சதவிகிதத்திற்கும் மேல்நிறைவேற்றப்பட்டுவிட்டது. இன்னும் 20 சதவிகிதம் 30 சதவிகிதம் மீதம் இருக்கிறது. விண்ணப்பத்தை அவர்கள் பூர்த்தி செய்யாமல் தவறவிட்டுவிட்டார்கள். சிலர் தவறுதலாகப் பதிவு செய்திருக்கிறார்கள். அதையெல்லாம் திருத்தி, அதற்கு ஒரு முகாம் போட்டு, அதையும் செப்டம்பர் மாதத்திலிருந்து வழங்க இருக்கிறோம். அது, ஒரு பெரிய திட்டம். பேருந்தில் கட்டணமில்லா விடியல் பயணம் - அது ஒரு பெரிய திட்டம். மாணவ - மாணவியர்கள் பள்ளிப் படிப்பு முடித்துவிட்டு கல்லூரிகளுக்குச் செல்லும்போது 1000 ரூபாய் வழங்கும் புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் எனும் அற்புதமான திட்டம். இப்படி பல திட்டங்கள் இருக்கின்றன. எதை சொல்வது? - எதை விடுவது? என்று தெரியவில்லை.*

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

---

### தமிழ்நாடு அரசு முழு ஒத்துழைப்பை வழங்கும்!

# திருப்புவனம் காவல் நிலைய மரண வழக்கு - சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றம்!

**“இனி இதுபோன்ற செயல் எக்காலத்திலும் எங்கும் யாராலும் நடந்துவிடக் கூடாது!”**

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, ஜூலை 3–**

**திருப்புவனம் காவல் நிலைய மரண வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.**

**இவ்வறிவிப்பினை வெளியிட்டு அறிக்கை வெளியிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “இவ்வழக்கின் விசாரணைக்கு தமிழ்நாடு அரசு சி.பி.ஐ.க்கு முழு ஒத்துழைப்பு வழங்கும்! இனி இதுபோன்ற செயல் எக்காலத்திலும் எங்கும் யாராலும் நடந்து விடக் கூடாது” என்று குறிப்பிட்டுள்ளார்கள்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கை வருமாறு:-

சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில், கடந்த 28-6-2025 அன்று வழக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட அஜித்குமார் என்பவர், திருப்புவனம் காவல் நிலையத்தில் மர்மமான முறையில் மரணம் அடைந்தார். விசாரணையின்போது காவலர்கள் நடத்திய தாக்குதல்தான் அவரது மரணத்துக்குக் காரணம் என்பதை அறிந்ததும் நான் மிகவும் வேதனையடைந்தேன்.

இது யாராலும் நியாயப்படுத்தப்பட முடியாத, காரணம் சொல்லித் தப்பிக்க முடியாத செயல். இந்தச் சம்பவம் தொடர்பாகக் குற்றம்சாட்டப்பட்ட 6 காவலர்கள் உடனடியாகச் சம்பவம் நடந்த அன்றே பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். இத்தகைய வழக்குகளில் பின்பற்றப்பட வேண்டிய சட்ட நடைமுறைகளின்படி, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றைய தினம், 5 காவலர்கள் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கு விசாரணை சிபிசிஐடி பிரிவுக்கும் மாற்றப்பட்டது.

இன்று சம்பந்தப்பட்ட மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளார். துணைக் கண்காணிப்பளர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இப்படி சட்டபூர்வமான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது.

துயர மரணத்தை அடைந்துள்ள அஜித்குமார் அவர்களின் குடும்பத்தினருடன் தொடர்பு கொண்டு நான் பேசினேன். நடைபெற்ற துயரச் சம்பவத்திற்கு எனது வருத்தத்தை அவர்களிடம் தெரிவித்தேன்.

நியாயமான, ஒளிவுமறைவற்ற, எவ்வித பாரபட்சமுமற்ற விசாரணை மேற்கொள்ளப்படும் எனவும், இந்தச் சம்பவத்திற்குக் காரணமானவர்கள் மீது, கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, திரு. அஜித்குமாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு நியாயம் கிடைத்திட வழிவகை செய்யப்படும் என்றும் உறுதியளித்துள்ளேன்.

சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை, இவ்வழக்கில் சிபிசிஐடி தனது விசாரணையைத் தொடரலாம் எனவும் தெரிவித்துள்ளது.

இருப்பினும், இந்தச் சம்பவத்தில் காவல் துறையைச் சேர்ந்த ஐவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், இந்த வழக்கின் விசாரணை குறித்து, எந்தவிதமான ஐயப்பாடும் எழுப்பப்படக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு, இந்த வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்றிடுமாறு நான் உத்தரவிட்டுள்ளேன். சி.பி.ஐ. விசாரணைக்கு முழு ஒத்துழைப்பை தமிழ்நாடு அரசு வழங்கும்.

காவல்துறையினர் தங்களது விசாரணையின்போது மனித உரிமையைக் காக்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதை நான் பலமுறை வலியுறுத்தி இருக்கிறேன். இதுபோன்ற மீறல் சம்பவங்களை நான் எப்போதும் ஏற்றுக்கொள்வது இல்லை.

திருப்புவனத்தில் சில காவலர்கள் செய்த செயல், மன்னிக்க முடியாதது. இனி இதுபோன்ற செயல் எக்காலத்திலும் எங்கும் யாராலும் நடந்துவிடக் கூடாது என்பதை எச்சரிக்கையாகவே சொல்ல விரும்புகிறேன்.

தங்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்திடும் என நம்பி காவல்துறையை நாடி வரும் பொதுமக்களின் நம்பிக்கையைக் காப்பாற்றிடும் வகையில் காவல்துறை எப்போதும் செயல்பட வேண்டும்.

இவ்வாறு அவ்வறிவிப்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### விருதுநகர் மாவட்டம் – சாத்தூர் வட்டம் –

# சின்னக்காமன்பட்டி தனியார் பட்டாசு ஆலையில் வெடிவிபத்து!

## உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் நிதியுதவி!

சென்னை, ஜூலை 3–

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், சின்னக்காமன்பட்டி கிராமத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி, நிதியுதவி அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் அறிக்கை வருமாறு:-

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், சின்னக்காமன்பட்டி கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் 01.07.2025 அன்று காலை சுமார் 8.30 மணியளவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் சிவகாசி வட்டம், மீனம்பட்டியைச் சேர்ந்த மகாலிங்கம் (வயது 55) (த/பெ. ராமசாமி), அனுப்பன்குளத்தைச் சேர்ந்த செல்லப்பாண்டியன் (த/பெ. சின்னையா), மத்திய சேனையைச் சேர்ந்த திருமதி.லட்சுமி (க/பெ. கருப்பசாமி), விருதுநகர் வட்டம், ஓ.கோவில்பட்டியைச் சேர்ந்த ராமமூர்த்தி (வயது 38) (த/பெ.ராம்ராஜ்), சேர்வைக்காரன்பட்டியைச் சேர்ந்த ராமஜெயம் (வயது 27) (த/பெ. கந்தசாமி) மற்றும் சூலக்கரையைச் சேர்ந்த வைரமணி (வயது 32) (த/பெ. காந்தி) ஆகிய ஆறு நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் லிங்குசாமி (வயது 45), மணிகண்டன் (வயது 40), கருப்பசாமி (வயது 27), திருமதி.முருகலட்சுமி (வயது 48) மற்றும் மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் அழகுராஜா (வயது 28) ஆகிய ஐந்து நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா நான்கு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அவ்வறிக்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

**அதிமுகவை விழுங்கும் அமித்ஷா!**

